வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 26.11.2025 புதன்கிழமை | இதழ் : 330 | பக்கங்கள் : 08

## அனர்த்தத்தால் 560 பேர் பாதிப்பு

**த.பிரதீபன், பு.கஜிந்தன்**
*யாழ்ப்பாணம், நவ. 26*

காற்றுடன்கூடிய கனமழையால் யாழ்ப்பாணத்தில் 171 குடும்பங்களைச் சேர்ந்த 560 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதி பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 123 குடும்பங்களைச் சேர்ந்த 385 பேர் வெள்ளம், மின்னல் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், ஐந்து வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன. இதேபோன்று, 07

# வானிலை நெருக்கடி இன்று முதல் ஆரம்பம்

## வடக்கு, கிழக்கே அதிகளவில் பாதிக்கப்படும்

## சனிக்கிழமை வரை ஆபத்து நிலை தொடரும்

- பொதுமக்கள் அவதானமாக செயல்படவேண்டும்
- வெள்ளி, சனிக்கிழமை 350 மி. மீ. மழை கிடைக்கலாம்

*யாழ்ப்பாணம், நவம்பர் 26*

இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் சனிக்கிழமை வரை கிழக்கு, வடக்கு மாகாணங்கள் கனமழை, வேகமான காற்று வீசுகை - புயலால் பாதிக்கப்படும். இரு காற்று சுழற்சிகள் ஒன்றாகி புயலாக மாற்றம் பெற்று நாளை மறுதினம் வடக்கு மாகாணத்தை நோக்கி நகரும். இதனால், முழுநாடும் கனமான மழை கிடைக்கப்பெறும். இதனால், வரலாறு காணாத நெருக்கடி நிலையை வடக்கு, கிழக்கு மாகாணங்களும் நாடு எதிர்கொள்ளும் வாய்ப்புள்ளது என்று யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை தலைவரும் வானிலை அவதானிப்பாளருமான நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை அவர் விடுத்த வானிலை அவதானிப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

இலங்கையின் காலநிலை வரலாற்றில் இரண்டு காற்றுச் சுழற்சிகள் ஒன்றாகி தென் பகுதியூடாக ஊடறுத்து கிழக்கு, வடக்கு மாகாணத்தை நோக்கி வருவது இதுவே முதன்முறையாகும். வங்காள விரிகுடாவின் வரலாற்றிலும் மேற்கு நோக்கி நகர்ந்த காற்றுச் சுழற்சி மீண்டும் கிழக்கு நோக்கி நகர்ந்து இன்னுமொரு காற்றுச் சுழற்சியுடன் இணைந்து 07

**வடக்கில் குற்றங்கள் உயர்வு:**

## கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் கூடுதல் அக்கறை காட்டவேண்டும்

**ஆளுநர் வேதநாயகன்**

**பு. கஜிந்தன்**
*யாழ்ப்பாணம், நவ. 26*

வடக்கு மாகாணத்தில் அதிகரித்து வரும் காணி மோசடிகள், சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் போதைப் பொருள் பாவனை ஆகியவற்றை கட்டுப்படுத்தப் பொலிஸார் 07

## போதைப்பொருட்களுடன் யாழில் நேற்று ஐவர் கைது

**த. பிரதீபன், பு. கஜிந்தன்**
*யாழ்ப்பாணம், நவ. 26*

பாடசாலை மாணவர்களுக்கு ஐஸ் போதைப்பொருளை விற்பனை செய்தவர் உட்பட ஐந்து பேர் நேற்று யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து மாசி கருவாடு சம்பல் 07

## சஜித்துக்கு வால் பிடித்தோரும் மன்னிப்புக் கேட்கவேண்டும்!

**சிறீதரன் எம். பி. திருமலையில் தெரிவிப்பு**

*திருகோணமலை, நவ. 26*

திருகோணமலை கடற்கரையில் சட்டவிரோதமாக புத்தர் சிலை வைத்ததை தேசிய பிரச்னை என்று சொன்ன சஜித் பிரேமதாஸவைத் தான் எங்களில் சிலர் ஜனாதிபதியாக்க மூன்று கால்களில் நின்றனர். தற்போது அவரின் உள்ளத்தில் என்ன உள்ளது என்ற உண்மை முகம் வெளிவந்துள்ளது. சஜித் மட்டுமல்ல, அவருக்கு பின்னால் வால் 07

## விடுதலை போரில் உயிர்நீத்த 4 இனங்களின் மாவீரரின் பெற்றோரையும் கௌரவியுங்கள்




**மூத்த போராளி பசீர் காக்கா கோரிக்கை**

*யாழ்ப்பாணம், நவ. 26*

நாட்டின் நான்கு இனத்தைச் சேர்ந்த போராளிகளும் மாவீரர் ஆகியுள்ளனர். எமது போராட்டத்தின் நியாயத்தன்மையை உணர்ந்தே இறுதி யுத்தம் வரை உறுதியுடன் போராடியுள்ளனர். இந்த மாவீரர்களின் பெற்றோர்களும் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் - இவ்வாறு மூத்த போராளியான பசீர் காக்கா அல்லது காக்கா அண்ணா என்று அறியப்பட்ட மு. மனோகர் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றைய தினம் அவர் நடத்திய செய்தியாளர் 07

## கல்வித்துறை சவால்களை தீர்க்க அரசியல் கடந்து ஒத்துழையுங்கள்

**பாராளுமன்றத்தில் பிரதமர் கோரிக்கை**

*கொழும்பு, நவ. 26*

சிறந்த திட்டமிடமிடலுடன் புதிய கல்வி மறுசீரமைப்பு அமுல்படுத்தப்படுகிறது. இது பிள்ளைகளின் சிறந்த எதிர்காலத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆகவே, தோற்றம் பெறும் சவால்களுக்கு தீர்வு காண அரசியலுக்கு அப்பாற்பட்டு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் கல்வி, உயர்கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய. 07

## காதலனின் வீட்டில் நகை திருடிய காதலி கைதானார்

**பு. கஜந்தன், த. பிரதீபன்**
*தென்மராட்சி, நவ. 26*

காதலனின் வீட்டில் நகைகளை திருடிய குற்றச்சாட் டில் பெண் ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அறிய வருபவை வருமாறு,

சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலைய வீதியைச் சேர்ந்த இளைஞரும் கிளிநொச்சியை 07

**தொல்பொருள் பெயர் பலகை அகற்றம்**

## வாழைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் உட்பட ஐவருக்கு பிணை

**கிருஷ்ணா**
*மட்டக்களப்பு, நவ. 26*

"தொல்பொருள் இடங்கள்", என்று குறிப்பிட்டு தொல்பொருள் திணைக்களம் அமைத்த பெயர் பலகைகளை அகற்றிய வாழைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர், பிரதி தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் உட்பட ஐந்து பேருக்கு நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

வாழைச்சேனை பிரதேச சபை எல்லைக்குள் 07

## பூநகரியில் காற்றாலை அமைப்பதற்கு திட்டம்!

*கிளிநொச்சி, நவ. 26*

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் காற்றாலை மின்சார உற்பத்தி நிலையங்களை நிறுவுவது தொடர்பில் நேற்றைய தினம் ஆராயப்பட்டது.

நேற்றைய தினம் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி கிளிநொச்சிக்கு வருகை தந்திருந்தார். அவர், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்றிலும் பங்கேற்றிருந்தார்.

## தமிழ் அரசின் வழக்கு ஒத்திவைப்பு

*திருகோணமலை, நவ. 26*

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் தெரிவு தொடர்பில் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் மார்ச் 13ஆம் 07

## கரணவாய் இளைஞர் படுகொலை; சந்தேகநபர்களுக்கு தடுப்பு காவல்

**த.காண்டீபன், சி.தில்லைநாதன்**
*வடமராட்சி, நவ. 26*

பிறந்தநாளன்று திட்டமிட்டு அழைத்து இளைஞரை படுகொலை செய்த சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் இருவரையும் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

வடமராட்சி - கரவெட்டி - கரணவாயில் கடந்த 19ஆம் திகதி நள்ளிரவுவேளை பிரான்ஸிலிருந்து வந்த வரை திட்டமிட்டு கைபேசி மூலம் அழைப்பு ஏற்படுத்தி அழைத்துள்ளனர். இதைத் தொடர்ந்து வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் சென்றவரை பின்தொடர்ந்த இருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கிக் கொன்றுவிட்டு 07

**உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமனாரை கொன்ற மருமகன் கைதானார்

கிளிநொச்சி, நவ. 26

மகளை தாக்க முயன்றவரை தடுத்த மாமனாரை தாக்கிக் கொன்ற மருமகனையும் அவருக்கு உடந்தையாக இருந்த சிறிய தந்தையையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சி - அக்கராயன் - ஸ்கந்தபுரம் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது, தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

கணவருடன் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து மகள் தனது தந்தையின் வீட்டுக்கு வந்துள்ளார். அங்கு வந்த மருகமன் (மகளின் கணவர்) தனது மனைவியை தாக்க முயன்றுள்ளார். அப்போது மாமனார் தடுத்துள்ளார். இதில், அவர் படுகாயமடைந்தார்.

அவர் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்ட நிலையில் இடையிலேயே உயிரிழந்தார். கதிரவேலு சிவராசசிங்கம் (வயது 56) என்பவரே உயிரிழந்தார்.

இந்தக் கொலை தொடர்பில் 25 வயதான மருகமன் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன், அவருக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் அவரின் சிறிய தந்தையும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அக்கராயன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கண்டெடுத்த ஒன்றரை பவுண் சங்கிலியை உரியவரிடம் ஒப்படைத்த பொலிஸ் அதிகாரி



வவுனியா, நவ. 26

வவுனியா மருத்துவமனையில் தவறவிடப்பட்ட ஒன்றரை பவுண் சங்கிலியை எடுத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் உரியவரிடம் ஒப்படைத்துள்ளார். அவரின் இந்தச் செயலுக்கு பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

வவுனியா மருத்துவமனையின் பொலிஸ் காவல் மையத்தில் பணியாற்றும் பொலிஸ் சார்ஜென்ட் (46674) திலகரதன என்ற அதிகாரி மருத்துவமனையில் கண்காணிப்பில் ஈடுபட்டபோது, தங்கச் சங்கிலி ஒன்றைக் கண்டெடுத்தார்.

இது தொடர்பில் செவிலியர் குழுவுக்கு அறிவித்ததுடன், அதனை பொலிஸ் காவல் மையத்தில் பாதுகாப்பாக வைத்திருந்தார்.

இந்த நிலையில், தனது தங்கச்சங்கிலி தொலைந்தது தொடர்பில் பல்கலைக்கழக மாணவி அங்கு வந்து தேடியுள்ளார். இது தொடர்பில், மருத்துவமனையின் பொலிஸ் காவல் மையத்துக்கு தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அடையாளத்தை உறுதிப்படுத்திய பின்னர், தங்கச் சங்கிலி உரிமையாளரான அந்தப் பெண்ணிடம் வழங்கப்பட்டது. (ஐ)

# ஹெரோயினுடன் இருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 26

ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரியாலை, நல்லூர் - அரசடி பகுதிகளிலேயே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அரியாலை பகுதியில் இரண்டரை கிராம் ஹெரோயினுடன் 27 வயதான சந்தேகநபர் கைதானார். குருநகர் சோதனைச் சாவடி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின்பேரில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இதேசமயம், நல்லூர் - அரசடியில் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட 24 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 570 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

இருவரையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் நீதிமன்றில் முற்படுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-03-05)

# பயிற்சி பட்டறை

கிளிநொச்சி, நவ. 26

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராம அலுவலர்களுக்கு விவசாய தரவுகளை சேமித்தல் தொடர்பான பயிற்சி பட்டறை ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்தப் பயிற்சி பட்டறையில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சு. முரளிதரன் கலந்து கொண்டு கருத்துகளை வழங்கியிருந்தார். (ஐ)

# மாவீரர்களின் நினைவாக குருதிக்கொடை முகாம்!



வடமராட்சி, நவ. 26

மாவீரர் தினத்தை முன்னிட்டு இரத்த தான முகாம் நேற்று செவ்வாய்க்கிழமை நாகர்கோவில் குருகுலம் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் நிதிப் பங்களிப்பில், வடமராட்சி கிழக்கு இளைஞர்களின் ஏற்பாட்டில் இந்த இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டது.

குருதிக்கொடை முகாமின் ஆரம்பத்தில் மாவீரர்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் ஜெயகோபி, பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் கணைச்செல்வன், ஜனநாயக போராளிகள் கட்சியின் செயல்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

குருதிக்கொடை முகாம் நிறைவில் குருதிக் கொடையாளர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (ஐ-02-08)

# நினைவுப்பகிர்வும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், நவ. 26

இலங்கை பொதுவுடைமை இயக்க முன்னோடியும் கே. ஏ. எஸ். சத்தியமனை நூலக தந்தையுமான தோழர் கே. ஏ. சுப்பிரமணியத்தின் 36ஆவது விடைபெற்ற ஆண்டு நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொல்புரம் மேற்கு, சுழிபுரத்தில் அமைந்துள்ள கே. ஏ. எஸ். சத்தியமனை நூலகத்தில் இந்த நடைபெறும் இந்த நிகழ்வில் அவரின் நண்பர்களான தகைசால் விரிவுரையாளர் ஏ. ஜே. கனகரத்தினா, தகைசால் பேராசரியர் சி. தில்லைநாதன் ஆகியோரும் நினைவேந்தப்படவுள்ளனர். அத்துடன், நினைவுப்பகிர்வும் கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது. (ஐ)

# இலத்திரனியல் சாதன காட்சியறை தீயில் நாசம்!

வவுனியா, நவ. 26

இலத்திரனியல் சாதன காட்சியறை ஒன்று தீயில் முழுமையாக எரிந்து நாசமானது.

நேற்று காலை 9.45 மணியளவில் வவுனியா நகரில் ஹொரவப்பொத்தானை வீதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காட்சியறையின் மேல் தளத்தில் ஏற்பட்ட மின்னொழுக்கால் இந்தத் தீ பரவியதாக சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

தீப்பரவல் ஏற்பட்டு சில நிமிடங்களில் மாநகர சபை தீயணைப்பு பிரிவினர் சம்பவ இடத்துக்கு சென்று தீயை அணைக்க முயன்றாலும் காட்சியறை தீயில் எரிந்து முற்றாக நாசமானது.

பொதுமக்களின் பங்களிப்புடன் சுமார் ஒன்றரை மணிநேர முயற்சியின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்தத் தீயை அணைக்க விமானப்படை, இராணுவம், பொலிஸாரின் உதவியும் பெறப்பட்டது. (ஐ-10)

# பால்நிலை வன்முறைக்கு எதிராக 16 நாள் பிரசார திட்டம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், நவ. 26

பால்நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள் பிரசார செயல்பாடுகள் உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகிறது. இதற்கமைவாக யாழ். சமூக செயல்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் இந்த பிரசார திட்டம் எதிர்வரும் டிசெம்பர் 10ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள் ளது.

இந்த பிரசார செயல் திட்டம் "அனைத்துப் பெண்கள், சிறுமிகளை இணையவழி வன்முறைகளிலிருந்து இன்றே பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தநிலையில் விழிப்புணர்வு பிரசுரத்தை வழங்கும் நிகழ்வானது நேற்றுமுன்தினம் யாழ் மாவட்ட செயலகத்தில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். சமூக செயற்பாட்டு மைய நிறைவேற்று அலுவலர் ந. சுகிர்தராஜ் மாவட்ட அரசாங்க அதிபருக்கு விழிப்புணர்வு பிரசுரத்தை வழங்கி வைத்தார்.

இதில், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், உதவி மாவட்ட செயலர் உ. தர்சினி, பெண்கள் அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர் கி. தயாபரி மற்றும் யாழ். சமூக செயல்பாட்டு மைய உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். (ஐ)

# மாவீரர்களின் பெற்றோர், உறவினர் வடமராட்சி கிழக்கில் மதிப்பளிப்பு



வடமராட்சி, நவ. 26

மாவீரர்களின் பெற்றோர் மதிப்பளிப்பு நிகழ்வு மருதங்கேணியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில் மாவீரரின் பெற்றோர், உறவினர்கள் வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து, மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்துகொண்டார். (ஐ-02-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
26.11.2023 புதன்கிழமை

விசுவாவசு வருடம், கார்த்திகை 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# கனடாவிடம் கோரிக்கை விடுப்பதற்கு முன்னர்...!

இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் பிரிவினை வாதத்தை ஊக்குவிக்கும் கொள்கையை கனடிய அரசாங்கம் அங்கீகரிக்கக்கூடாது என்று குறிப்பிட்டிருக்கிறார். இலங்கைக்கான கனடிய உயர்ஸ்தானிகர் இசபெல் கத்தரீனுடான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார். கனடிய அரசாங்கம் அடிப்படையில் பிரிவினைவாதத்தை ஆதரிக்கவில்லை. மேலும், கனடா விடுதலைப் புலிகள் அமைப்பை ஒரு சர்வதேச பயங்கரவாத அமைப்பாக 2006இல் தடை செய்திருந்தது. எனினும், ஒரு தாராளவாத நாடு என்னும் வகையில் அந்த நாட்டில் வாழும் ஜனநாயக ரீதியான குரல்களுக்கான வாய்ப்பைத் தடைசெய்யவும் முடியாது.

இந்தப் பின்புலத்தில்தான் விடுதலைப் புலிகளின் அடையாளங்களை சிலர் முன்னிலைப்படுத்தும்போது, அதனை சட்டரீதியில் கனடா தடைசெய்ய முடியாதிருக்கிறது. உள்ளூர் அரசியல்வாதிகள் தங்களின் தேர்தல் அரசியலுக்காகக் கனடாவில் வாழும் தமிழ் மக்கள் தொடர்பில் மட்டுமல்ல, சீக்கியர்கள் மற்றும் பலஸ்தீனிய ஆதரளவாளர்களுடன் தங்களை இணைத்துக் கொள்கின்றனர். இது அடிப்படையில் உள்ளூரில் வாக்குகளை சேகரிக்கும் தேர்தல் உத்தியோடு தொடர்புடையது. மற்றும்படி கனடிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டுக்கும் உள்ளூர் அரசியல்வாதிகளின் செயல்பாட்டுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இந்த விடயங்களை இலங்கை அரசாங் கமும் அறியாதது அல்ல.

ஆனால், அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம் வேறு. அதாவது, கனடாவிலுள்ள புலம்பெயர் தமிழ் குழுக்கள் (நிச்சயமாக பெரும்பான்மையினர் இதில் பங்குகொள்ளவில்லை) பிரிவினைவாதத்தை உயர்த்திப்பிடிக்க முற்படுகின்றனர் என்றால், மறுபுறம் இலங்கையின் ஆட்சியாளர்கள்தான் அதற்கான வாய்ப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றனர். இதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எந்த வகையில் விதிவிலக்காக இருக்கிறது?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஒரு வருடம் கடந்துவிட்டது. தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவாக தமிழ் மக்களில் கணிசமானவர்களும் வாக்களித்திருக்கின்றனர். ஆனால், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை கண்டடைதல் தொடர்பான விடயங்களில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எந்தளவுக்கு முன்னேற்றகரமான விடயங்களை நிரூபித் திருக்கிறது?

மாகாண சபைகள் தேர்தல் நடைபெறுமா என்பதில் இப்போதும் சந்தேகங்கள் நிலவுகின்றன. மறுபுறம் அரசமைப்பில் உள்ளவற்றை முழுமையாக அமுல்படுத்தும் விடயத்தில் இதுவரையில் உறுதியான அரசியல் நகர்வுகள் எதனையும் அரசாங்கம் வெளிப்படுத்தவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில்தான் புலம்பெயர் சூழலிலுள்ள சில குழுக்கள் உற்சாகமடைகின்றன. இலங்கையில் முன்னேற்றகரமான விடயங்கள் நடைபெறாதபோதுதான் அந்த இடைவெளியை பிரிவினைவாத சக்திகள் பயன்படுத்திக் கொள்கின்றன. கடந்த காலத்தில் தமிழ் மிதவாத தரப்புகளின் நியாயமான அரசியல் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்ட போதுதான், தமிழ் இளைஞர்கள் பிரிவினை நோக்கில் ஆயுதங்களை நாடத் தொடங்கினர். உதாரணமாக பண்டா - செல்வா உடன்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இலங்கைத் தீவின் இனத்துவ அரசியலானது மோதல் நிலையை நோக்கிச் சென்றிருக்காது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒப்பீட்டடிப்படையில் இந்த விடயங்களைப் புரிந்து கொண்டு செயல்படக்கூடிய உள்ளாற்றலை கொண்டிருக்கின்றது. ஆனால், அதற்கான அரசியல் தற்துணிவை இன்னும் நிரூபிக்கவில்லை. இந்தப் பின்னணியில் அரசாங்கமானது வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் தொடர்பில் கவலைப்படுவதை விடுத்து, இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்வது தொடர்பிலேயே கவனம் செலுத்த வேண்டும்.

## வட மாகாண மர நடுகை மாதம் கார்த்திகை - 2025



“பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது
பாட்டன் நட்ட பலா மரம் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய்
மாசடையாச் சூழல் சாவடையா வாழல்!”
- கவிஞர் புதுவை இரத்தினதுரை

**வாசகர் கருத்து**

# இலக்கற்ற எதிர்ப்புகள்: ஈழத் தமிழ் மக்களுக்கு நல் வழிகாட்டும் செய்தி!

**-மறவன்புலவு க. சச்சிதானந்தன்**

*இலக்கற்ற எதிர்ப்புகள் என்று தலைப்பில் உங்களது தலையங்கம் (25.11.2025) படித்தேன்.*

*16 ஆண்டுகளுக்கு முன் பெரும் தோல்வி, படு தோல்வி. 13 அரசுகள் எதிரிக்கு சார்பான தாலும் தோல்வி.*

*அறவழி 30 ஆண்டுகள்*
*மறவழி 30 ஆண்டுகள்*
*போராட்டங்கள்.*
*போராட்ட உணர்வு மதிக்க வேண்டியதே.*
*மேலாதிக்கத்துக்கு எதிரான போராட்ட உணர்வு.*
*போராட்ட உணர்வு தொடர்ச்சியானது.*
*மனித மனத்தில் மங்காதது.*
*போராட்டம் ஒரு கருவியே.*
*போராட்டமே வாழ்வு அன்று.*

*60 ஆண்டுகளான போராட்ட நிலையோ வேறென்ன காரணமோ எதிர்ப்புணர்வைத் தமிழ் ஈழ மக்கள் எங்கிருந்தாலும் ஒவ்வொருவரும் எல்லையற்று வளர்த்துள்ளனர்.*

*எதை எதிர்ப்பது?*
*எதை எதிர்க்க கூடாது?*
*எதிர்ப்பதில்*
*எதற்கு போராடுவது?*
*எதற்கு போராடக்கூடாது?*
*போராடுவதானால் எந்த வழி?*
*கருத்து வழியா?*
*செயல் வழியா?*
*கருத்து வழியெனில் எவ்வாறு வெளிக் கொணர்வது?*
*எழுத்து வழியா? பேச்சு வழியா? கலை வடிவ வழியா? அல்லது அனைத்தும் கலந்த அளவுகளிலா?*
*கருத்துகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பது எவ்வாறு?*
*கருத்துகளுக்கு ஆதரவு திரட்டுவது எவ்வாறு?*
*செயல் வழியாயின் தன்னை ஈந்தா? ஒத்தவர்களையும் ஈந்தா?*
*செயல்வழியில் ஈடுபடாதவர்கள் ஒப்பாதவர்கள் துன்பம் அடைவார்களா?*
*கருத்து வழியாயின்*
*செயல்வழியாயின்*
*பட்டறிவு என்ன?*
*கற்ற பாடங்கள் என்ன?*

*முன்பு நாம் விட்ட பிழைகள் தவறுகள் தடங்கல்களாக தடுப்புகளாக பின் தள்ளியவையாக தோல்விக்கானவைகளாக இருப்பின் அவற்றை மீண்டும் முன்னெடுக்காமல் மாற்று வழிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டாமா?*

*கருத்து வழியும்*
*செயல்வழியும்*
*எதிர்த்தோம் எதிர்க்கிறோம் எதிர்ப்போம்*
*போராடினோம் போராடுகிறோம் போராடுவோம்*
*இவை ஒன்றே நமக்குத் தெரிந்த வழியா?*
*அறிவும் ஆற்றலும் திறமையும் புலமையும் ஓடி ஒளிந்தனவா?*
*ஆயிரம் மலர்கள் மலரட்டுமே என்ற அகன்ற விரிந்த பரந்த நோக்கமும் பார்வையும் எங்களை விட்டு அகன்றனவா?*

*பகுப்பாய்வும் கொள்கை வகுப்பும் அற்ற கருத்துத் திணிப்பும் ஒருங்கமையாத ஒருங்கிணைக்காத தன்னிச்சையான தான்தோன்றித்தனமான கருத்துகளும் செயல்களும் வெளிப்பாடுகளும் எல்லை மீறிக் கட்டுக்கடங்காமல் காட்டு வெள்ளமாக மாறினவா?*

*அறிவு என்னும் அணையும்*
*அன்பு என்னும் அரவணைப்பும்*
*அருள் பெருக்கும் கண்ணோட்டமும்*
*அறத்துக்குள் நிற்கின்ற வாழ்வும்*
*இவை இல்லாத வாழ்வியல் முன்னெடுப்புகள், மலர்ச்சிக்கான முயற்சிகள் வளர்ச்சிக்கான திட்டமிடல் யாவும் தோல்விக்கு மேல் தோல்வியைத் தொடர்ந்து தருமல்லவா?*


*ஆகா, இப்படி ஒரு முதிர்ச்சியற்ற சமூகம் சமுதாயம் இனம் மக்கள் இருக்கிறார்களே இவர்களை எளிதில் மேலாதிக்கத்துள் கொண்டுவரலாம்*
*எளிதில் மதமாற்றம் செய்துவிடலாம்*
*எளிதில் இவர்கள் மரபுகளை உடைத்து விடலாம்*
*இவர்களை அடக்கி விடலாம் ஒடுக்கிவிடலாம் அழித்துவிடலாம் என்ற நிலை ஏற்படலாம் அல்லவா?*

*நயமிக்க நாகரிகரைக் கொடுங் காட்டுமிராண் டிகளே மோதலில் போரில் எப்பொழுதும் வென்றுள்ளார்கள் என்ற வரலாறு நமக்குப் பாடமாக அமையாதா?*


*இலக்குகளற்ற எதிர்ப்புகளை வாழ்வாகக் கொள்ளாதீர். ஈழநாடு இதழில் உங்கள் தலையங்கம் உணர்த்தும் செய்தி.*

*ஈழத் தமிழ் மக்களுக்கு நல் வழிகாட்டும் செய்தி.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். உறவினர்கள் நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**இடபம்**

கடந்த நாட்களாக இருந்த சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். உறவினர்களிடம் உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். யாருக்கும் பணம் நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம்.

**கடகம்**

உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும் சகோதரர் களின் அரவணைப்பு இருக்கும். தாயாரின் உடல் நிலை சீராகும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும்.

**சிம்மம்**

ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். பழைய சிக்கல்கள் தீரும்.

**கன்னி**

குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். உங்களை சுற்றி இருப்பவர்களின் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்**

எதிர்பார்த்தவை சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். தாயாருக்கு வீண் டென்ஷன் வந்துப்போகும்.

**விருச்சிகம்**

குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். விருந்தினர் வருகையால் வீடு களை கட்டும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**தனுசு**

கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த மனகசப்புகள் நீங்கும். தோற்ற பொலிவு கூடும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். மகிழ்ச்சியான நாள்.

**மகரம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். குடும்பத்தாரை குறை கூறி கொண்டிருக்க வேண்டாம். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

**கும்பம்**

விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள்.

**மீனம்**

தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

# "27 ஆம் திகதி மாவீரர் நாளை முன்னிட்டு வர்த்தக நிலையங்களை மூட வேண்டும்"

யாழ்ப்பாணம், நவ. 26

மாவீரர் நாளை முன்னிட்டு வர்த்தக நிலையங்களை மூட வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபையில் மாவீரர்களின் நினைவை போற்றும் நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றது.

உபதவிசாளர் தயாபரன் தலைமையில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் பலர் கலந்து கொண்டனர். பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அஞ்சலி நிகழ்வில் பங்கேற்றனர். இதன் போது, ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த உபதவிசாளர், மாவீரர் நாளை முன்னிட்டு முக்கியமான வேண்டுகோளை முன்வைத்தார் " 27ஆம் திகதி மதிய வேளையின் பின்னர் நெல்லியடி வர்த்தகர்கள் தங்களது கடைகள் மற்றும் வர்த்தக நிலையங்களை மூடி, நினைவேந்தலில் பங்கேற்கும் சூழலை உருவாக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

இது எங்கள் சமூகத்தின் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் தருணம்"- என்றார்.

(எ-03)

# ஊர்காவற்துறை பிரதேச சபை வரவு - செலவு திட்டம் தோல்வி

## ஈ. பி. டி. பி. மீது தவிசாளர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 26

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும் தேசிய மக்கள் சக்தியும் இணைந்து திட்டமிட்டு வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடித்ததாக ஊர்காவற்துறை பிரதேச சபை தவிசாளர் அ. அன்னராசா தெரிவித்தார்.

பட்ஜெட் தோற்கடிக்கப்பட்டமை தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், வரவு-செலவுத் திட்டத்தை சமர்பித்த போது அதனை எதிர்த்து வாக்களித்தவர்களிடம் திருத்தங்களை முன்வைக்குமாறு கோரியபோதும் அதனை செய்யாமல் எதிர்த்து வாக்களித்தனர்.

சபை வருமானத்தை அதிகரிக்குமாறு கூறுகிறார்கள். ஆனால், வருமானத்தை அதிகரிப்பதற்கு தாங்கள் ஒத்துழைக்க மாட்டோம் என்கிறார்கள். எங்களைத் தேடச் சொன்னார்கள். வருமான மூலத்தை கண்டறிய நான் ஒரு குழுவை அமைக்க கோரியிருந்தேன். அதற்கும் அவர்கள் ஒத்துழைக்கவில்லை.

வருமானம் இல்லாத சபையில் வருமான வழிகளை கண்டறிய ஒத்துழைக்காமல் செயல்பட்டால் நாம் என்ன செய்வது? இத்தனை ஆண்டுகள் ஈழமக்கள் ஜனநாயக கட்சி ஆட்சி செய்து என்ன செய்தது?

ஈ. பி. டி. பியும் தேசிய மக்கள் சக்தியும் இணைந்து திட்டமிட்டு வரவு- செலவுத் திட்டத்தை தோற்கடித்தன. பட்ஜெட் தோற்கடிக்கப்பட்டமை தொடர்பில் நான் அலட்டிக் கொள்ளவில்லை. நாம் தொடர்ந்து முன்செல்வோம் - என்றார்.

(எ-03)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ. 26

கைதடி, நாவற்குழி தெற்கு அருள்மிகு பெரும்படை அம்மன் ஆலயத்தில்சைவ வாழ்வியலில் திருவி ளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜ லிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 33 எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசன் "விறகு விற்ற படலம்" என்னும் தலைப்பில் நிகழ்த்தும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# ம. க. வேற்பிள்ளை பெரியாரின் குருபூஜை விழா

யாழ்ப்பாணம், நவ. 26

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமகாச் சிவசிறீ பால. திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவும் மாதந்தோறும் "ஈழத்து சமய பெரியார்கள்" குருபூஜை விழாவும் தொடர் 08 உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை பெரியாரின்

குருபூஜை விழா அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் ஆன்மீக விருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் பா. தனபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். ம. க. வேற்பிள்ளை

சைவப்பெரியாரின் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் சைவப்புலவர், சி. கா. கமலநாதன் "ம. க. வேற்பிள்ளை சைவப்பெரியாரின் சமயப்பணி" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவும் சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. தொடர்த்து ஆன்மீக விருந்தினர் உரையும் குருபூஜையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(எ)

# குடும்பஸ்தர் அடித்து கொலை: ஒருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில் அண்மையில் நான்கு பிள்ளைகளின் தந்தை கள்ளுத் தவறணையில் அடித்து கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புன்னாலைக் கட்டுவனில் உள்ள கள்ளுத்தவறனை ஒன்றில் கள்ளு அருந்துவதற்கு சென்ற நிலையில் அங்கு கள்ளு அருந்திக் கொண்டிருந்த இளைஞர்கள் இருவர் குறித்த குடும்பஸ்தரை தாறுமாறாக தாக்கியுள்ளனர்.

இதனால் படுகாயமடைந்த குடும்பஸ்தர் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

இந்த நிலையில் சந்தேகநபர் ஒருவர் கீரிமலையில் வைத்து சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(எ-03)

# சீரற்ற காலநிலையால் யாழில் 297 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 86 குடும்பங்களைச் சேர்ந்த 297 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

அத்தோடு 9 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-03)

# யாழ். பல்கலைக்குப் புதிதாக பேரவை உறுப்பினர் நியமனம்!

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவைக்குப் புதிய உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளரான குமாரசாமி சத்தியகுமார் என்பவரே உடனடியாகச் செயற்படும் வகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினர்களில் தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்கு வராத உறுப்பினர் ஒருவரின் வெற்றிடமான இடத்தின் எஞ்சிய காலப்பகுதிக்கு - 2028 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன் துறைமுக அபிவிருத்தி ஜனவரியில் இந்தியாவுடன் பேச்சு!

## அமைச்சர் அநுர கருணாதிலக்க



கொழும்பு, நவ. 26

**காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பில் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்தியாவுடன் பேச்சுவார்த் தைகளை ஆரம்பிக்கவுள்ளோம். இலங்கை-இந்திய கூட்டுத்தன் மையுடன் இந்த அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு இந்தியா இணக்கம் தெரிவித்து, 63.15 மில்லியன் டொலரை நிவாரணமாக வழங்க உத்தர வாத மளித்துள்ளதென துறை முகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அநுர கருணாதிலக்க தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற 2026 வரவு-செலவுத் திட்டத்தின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இலங்கையின் பிரதான துறைமுகமாகவும் சர்வதேச மட்டத்திலான கப்பல் மார்க்கத்தின் பிரதான கேந்திரமாகவும் கொழும்பு துறைமுகம் காணப்படுகிறது. இந்த துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய அபிவிருத்திப் பணிகள் 2026ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதமளவில் நிறைவடையும். இதனூடாக 2.5 மில்லியன் டொலர் வருவாய் ஈட்டிக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல் கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் அபிவிருத்திப் பணிகள் எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படும்.

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் 2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்தியாவுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கவுள்ளோம். இலங்கை இந்தியா கூட்டுத்தன்மையுடன் இந்த அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பது குறித்து இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய இந்தியா ஆரம்பத்தில் கடன் வழங்கவே இணக்கம் தெரிவித்திருந்தது. ஆனால் தற்போது 63.15 மில்லியன் டொலரை நிவாரணமாக வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது. இந்த அபிவிருத்திப் பணிகள் எதிர்வரும் ஆண்டு முன்னெடுக்கப்படும்-என்றார். (அ)

# தபால் சேவைக்கு புதிதாக 2 ஆயிரம் பேர் ஆட்சேர்ப்பு

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, நவ. 26

தபால் சேவைக்கு புதிதாக 2 ஆயிரம் பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், 1000 பேரை மேலதிக ஊழியர்களாக சேவையில் இணைத்துக் கொள்ள உள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தம்புள்ளை பிராந்திய தபால் பரிமாற்று மையத்தின் அடிக்கல் நாட்டு விழா, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-கொழும்பு மத்திய தபால் பரிமாற்று மையத்துக்கு மேலதிகமாக, நாட்டில் உள்ள பிரதான நகரங்களை மையமாகக் கொண்டு பிராந்திய தபால் பரிமாறறு மையங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக தற்போது 129 மில்லியன் ரூபா செலவில் தம்புள்ளை பிராந்திய தபால் பரிமாற்று மையம் நிர்மாணிக்கப்படவுள்ளது. கண்டி, பொலனறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கான தபால் விநியோகம் தம்புள்ளை பிராந்திய தபால் பரிமாற்று மையத்தின் மூலம் இடம்பெறும்.

கொழும்பு மத்திய தபால் பரிமாற்று மையத்தின் சுமையை குறைக்கும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 9 மாதங்களில் மாத்திரம் நாட்டிள் உள்ள 49 இலட்சம் நபர்கள், தபால் சேவையினுடாக 180 கோடி ரூபா பெறுமதியான சேவைகளை பெற்றுக் கொண்டுள்ளனர்.

தபால் சேவைக்கு புதிதாக 2 ஆயிரம் பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# கனடா, சுவிட்சர்லாந்தில் தொழில் பெற்றுத் தருவதாக பணம் மோசடி

## சந்தேக நபர்கள் விளக்கமறியலில்

கொழும்பு, நவ. 26

கனடா மற்றும் சுவிட்சர்லாந்து நாடுகளில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி மோசடியில் ஈடுபட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வரக்காபொல மற்றும் களுத்துறை நீதவான் நீதிமன்றங்களில் சந்தேக நபர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே அவர்களை விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட் டவர்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் புலனாய்வுப் பிரிவினர், சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

கனடாவில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி காலி மற்றும் நிக்கவரெட்டிய பகுதிகளை சேர்ந்த 04 பேரிடம் தலா 13 மில்லியன் ரூபாய் வீதம் 52 மில்லியன் ரூபாய் பணத்தை சந்தேக நபர் ஒருவர் பெற்றுக் கொண்டுள்ளார்.

எனினும் வழங்கப்பட்ட உறுதிக்கு அமைய அவர் தொழில் பெற்றுக்கொடுக்கவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, சுவிற்சர்லாந்தில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி 13 மில்லியன் ரூபாய் பணத்தை மோசடி செய்த பெண்ணொருவர் களுத்துறையில் கைது செய்யப்பட்டார்.

குறித்த பெண் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் வரவேற்புப் பிரிவில் பணியாற்றியவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# மழை சில தினங்கள் தொடரும்

கொழும்பு, நவ. 26

இலங்கையைச் சுற்றியுள்ள குறைந்த அளவிலான வளிமண்டலத் தளம்பல் காரணமாக அடுத்த சில நாட்களுக்கு வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் நிலவும் மழை நிலைமைகளில் அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மேகமூட்டமான வானம் எதிர்பார்க்கப்படுகிறது

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும், அம்பாந்தோட்டை மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் தெற்கு மாகாணங்களில் சில இடங்களில் 100 மி.மீற்றருக்கும் அதிகமான கனமழை பெய்யக்கூடும்.

வடக்கு மாகாணம் மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் அவ்வப்போது மணிக்கு 40 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கத்தால் ஏற்படும் சேதங்களைக் குறைக்க போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த கலாசாரத்துக்கான நோக்குடன்

# "தொல்பொருளை அடையாளப்படுத்துவது இன முரண்பாடுகளை தோற்றுவிக்கும்"

கொழும்பு, நவ. 26

பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடாமல் தொல்பொருள் இடங்களை அடையாளப்படுத்துவது இன முரண்பாடுகளை தோற்றுவிக்கும். தொல்லியல் எனும் போது அது பௌத்த கலாசாரத்துக்கான இடமென்று பார்க்கப்படுகிறது. அம்பிட்டிய சுமணரத்ன தேரர் அடாவடிகளில் ஈடுபடுகின்றார். தகாத வார்த்தைகளை பேசி இன நல்லிணக்கத்தை குழப்புகிறார். இவ்வாறானவர்களின் தலையீடுகள் தொல்லியல் விடயங்களில் இருக்கும் போது இன நல்லிணக்கம் பாதிக்கப்படும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீநேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"மட்டக்களப்பு மாவட்டத்தில் தொல்லியல் இடங்களை அடையாளம் காணும் விடயத்தில் கடந்த காலங்களில் பல பிரச்னைகள் ஏற்பட்டன. அங்கு இப்போது உள்ளூராட்சி சபைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

உள்ளூராட்சி சபைகளின் மேற்பார்வை மற்றும் ஆளுகையில் அந்த காணிகள் இருக்கின்றன. இதன்போது திடீரென அங்கு தொல்லியல் இடங்களுக்கான பதாகைகள் அமைக்கும் போது அங்கு முறுகல் நிலையொன்று ஏற்படுகின்றது.

மட்டக்களப்பில் இப்போது மிக மோசமான மத குருவொருவர் இருக்கின்றார். அவர் தகாத வார்த்தைகளையும் பேசுவார். இன முறுகல்களை ஏற்படுத்துவார். நுகேகொடையில் எதிர்க்கட்சிகள் கூட்டங்களை நடத்தும் போது எமது பிரதேசத்தில் தொல்லியல் இடங்கள் அடையாளப்படுத்தும் செயல்பாடுகள் இடம்பெற்றன.

ஜனாதிபதி கடந்த வாரம் எங்களை அழைத்து இலங்கை தினத்தை கொண்டாடி நாங்கள் ஐக்கியத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார். அதேவேளை மட்டக்களப்பில் உள்ளூராட்சி சபைகள், தவிசாளர்கள், உறுப்பினர்கள் இருக்கும் நிலையில் அவர்களுக்கு தெரியாமல் அங்கே தொல்லியல் இடங்களுக்கான அடையாளப்படுத்தல்கள் நடக்கின்றன. அங்கு சில பிரச்னைகள் ஏற்பட்டுள்ளதாக அறிகின்றோம்.

நாங்கள் சட்டத்தை மீறிச் செயல்பட விரும்பவில்லை சட்டத்தின் படி நடக்கவே விரும்புகின்றோம். ஆனால், இன நல்லிணக்கத்தை குழப்பக் கூடாது. உள்ளூராட்சி உறுப்பினர்கள், தவிசாளர்களை அழைத்து அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கலாம்.

கடந்த காலங்களில் சந்தேகத்துக்கிடமான விடயங்கள் நடந்துள்ளன. குருந்தூர் மலைப் பகுதியில் பௌத்த சின்னங்களை போட்டுவிட்டு அங்கு பௌத்த சின்னங்கள் இருந்ததாக மிஹிந்தலையில் உள்ள மதகுருவொருவரே கூறியுள்ளார். இதனால் எமது மக்கள் மத்தியில் சந்தேகங்கள் எழுகின்றன."- என்றார்.

(எ)

## கண்களை கறுப்பு துணியால் கட்டியபடி திருமலையில் இளைஞர்கள் கவனவீர்ப்பு



திருகோணமலை, நவ. 26

திருகோணமலை மாநகர சபை அண்மைக்காலத்தில் மேற்கொண்ட பிழையான நிர்வாக நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இளைஞர் கள் குழு ஒன்றால் சபைக்கு முன்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பதாகைகளை ஏந்திய வண்ணம் வருகை தந்த சுமார் 50 இளைஞர்கள்,மாநகர சபை வாசலில் தமது கண்களை கறுப்புத் துணியால் கட்டியபடி இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இளையோரின் கல்வி, வேலைவாய்ப்பு, திறன் விருத்தி சார்ந்து பல்வேறு சமூக செயல்பாடுகளை "தளம்" நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இந்த நிறுவனம் தற்போது மாநகர சபைக்கு உரித்தான கட்டடத்தொகுதியில் இயங்கி வருகிறது.

இந்தக் கட்டடம் தொடர்பில் சபையானது முறையற்ற, சட்ட முரணான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், இளையோரின் தொழில் முயற்சிகளை தடை செய்யும் ரீதியில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை எதிர்ப்பதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறினர்.

(எ)

## கிண்ணியா உப்பளம் குளமாக மாறியுள்ளது



திருகோணமலை, நவ. 26

திருகோணமலை, கிண்ணியா கச்சக்கொடித்தீவு பகுதியில் உள்ள உப்பளம் கன மழை காரணமாக நீரில் மூழ்கியுள்ளது.

பலத்த மழையுடனான கால நிலை காரணமாக குறித்த உப்பள செய்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன் நீரில் மூழ்கியுள்ளது.

இதனால் உப்பள செய்கையாளர்கள் மாரி காலத்தில் உப்பள செய்கையில் ஈடுபட முடியாத நிலை காணப்படுகிறது.

அதிக வெப்ப நிலை நிலவும் போது உப்பு உற்பத்தியை பெறக் கூடியதாக காணப்படுகிறது.

உப்புச் செய்கை உற்பத்தியை விருத்தி செய்வதன் ஊடாக அதிக வருமானங்களை ஈட்ட முடியும் என எதிர்பார்க்கப்படுவதுடன் கால நிலையில் மாற்றம் ஏதோ ஒரு வகையில் உப்பள செய்கையாளர்களை பாதிக்கின்றது. இதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றது.

## ஏறாவூரில் விபத்து இளைஞன் மரணம்

மட்டக்களப்பு, நவ. 26

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் வந்தாறுமூலை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

சந்திவேலி பகுதியிலிருந்து ஏறாவூர் நோக்கி பயணித்த டிராக்டர், எதிர்த் திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த இளைஞன் மாவடிவேம்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் ஓட்டமாவடி பகுதியைச் சேர்ந்த 23 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

விபத்துடன் தொடர்புடைய டிராக்டர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.(எ)

## குறை கூறிக்கொண்டிருக்காமல் மலையகத்தை முன்னேற்றுங்கள்

### அரச தரப்புக்கு மனோ கணேசன் அறிவுரை



கொழும்பு, நவ. 26

மலையகத்தில் இருக்கும் ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்மை குறை கூறிக்கொண்டிருக்காமல், நாங்கள் எமது காலத்தில் மலையகத்தில் மேற்கொண்ட வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

மலையக மக்களின் வீடுகள் தொடர்பான விடயம் வேறு ஒரு அமைச்சுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு இல்லாமல் வீடமைப்பு தொடர்பில் தேசிய கொள்கை ஒன்றை அமைத்து, அதனை ஒரு அமைச்சுக்கு கீழ் கொண்டு வந்து, நாட்டின் அனைத்து பகுதிகளுக்குமான வீடமைப்பு நடவடிக்கைகளை ஒரு அமைச்சுக்கு கீழ் கொண்டுவர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

எமது அரசாங்கத்தில் மலையக மக்களின் வீடமைப்பு பிரச்னை தொடர்பில் கவனம் செலுத்தி, இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் நாங்கள் கலந்துரையாடி, 14ஆயிரம் வீடுகளை அமைக்க தேவையான உதவிகளை பெற்றுத்தருவதான உத்தரவாதத்தை பெற்றுக் கொண்டோம். ஒரு வீட்டுக்கு 28 இலட்சம் ரூபாய் வழங்குவதாக தெரிவித்திருக்கிறது. அதனால் இந்த பணத்தை பெற்றுக்கொண்டு, பொறுப்புடன் செயல்படவேண்டும் என எதிர்பார்க்கிறோம்.- என்றார். (எ)

## அரைகுறை வேலைத்திட்டங்களால் மக்கள் வரிப்பணம் வீணாகின்றது

கொழும்பு, நவ. 26

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் முகவெற்றிலையாக கல்முனை காணப்படுகின்றது. கல்முனையை டுபாயாக மாற்றுவேன் என்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மார்தட்டி பேசி பேசி இன்று வரை ஏமாற்றிக் கொண்டேயிருக்கின்றார். கல்முனையில் வீடமைப்பு அதிகார சபைக்கு சொந்தமான 40 வருடங்களுக்கு மேற்பட்ட கட்டடமொன்று காணப்படுகின்றது. அதில் பல நிறுவனங்கள் வாடகை ஒப்பந்த அடிப்படையில் பயன்பெற்று வருகின்றன. அந்தக் கட்டடம் புனர்நிர்மாணம் செய்யப்படாமல் இடிந்து விழக்கூடிய நிலையில் காணப்படுகின்றது. தயவு செய்து அந்தக் கட்டட தொகுதியை முழுமையாக அகற்றி விட்டு 10 அல்லது 15 மாடிகளைக் கொண்ட நவீன வர்த்தக கட்டட தொகுதி ஒன்றை இந்த அமைச்சின் ஊடாக அமைத்து கல்முனை முகவெற்றிலையை அழகுபடுத்துமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன் என அகில இலங்கை மக்கள் காங்கி ரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் தெரிவித்தார்.

அரைகுறை வேலைத்திட்டங்களால் மக்கள் வரிப்பணம் வீணாகின்றது என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ-06)

## திருகோணமலை- வெருகல் பிரதேசத்தில் 7,106 ஏக்கர் காணி வழங்க கோரிக்கை

கொழும்பு, நவ. 26

திருகோணமலை மாவட்டத்தில் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவின் மொத்த நிலப்பரப்பு 32,041. 66 ஏக்கராக காணப்படுகின்ற நிலையில் வனவளத்திணைக்களத்தினரும், வனஜீவராசிகள் திணைக்களத்தினரும் வெருகலின் மொத்த நிலப்பரப்புக்கும் மேலதிகமாக 7,106 ஏக்கர் காணிகளை கோருவதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்தார்.

திருகோணமலை - வெருகல் பிரதேசத்தில் வனஜீவராசிகள் மற்றும் வனவளத் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பால் ஏற்படும் பாதிப்பு தொடர்பில், பாராளுமன்றில் திங்கட்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் ச. குகதாசன் சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை ஒன்றினை முன்மொழிந்தார். குறித்த சபை ஒத்து வைப்பு வேளை பிரேரணையில் பங்கேற்று கருத்து தெரிவிக்கும் போதே ரவிகரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வெருகல் பிரதேச செயலகப் பிரிவில் 10கிராம அலுவலர் பிரிவுகள் காணப்படுகின்றன. இந்தப் பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பின் அளவு 32041.66 ஏக்கராகும். இந்தப் பிரதேசத்தில் 4809 குடும்பங்களைச் சேர்ந்த 16,156 மக்கள் வாழ்கின்றனர். இவற்றில் 1970.10.09ஆம் திகதிய அல்லை அபயபூமி வர்த்தமானி மற்றும் 42424ஆம் இலக்க 1986.10.24 ஆம் திகதிய திரிகோணமடு வர்த்தமானி மூலமும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் 25242.13ஏக்கர் காணிகளைத் தமது காணிகளென உரிமை கோருகின்றனர்.

குறிப்பாக பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள், கிராம அலுவலர் அலுவலகம், மருத்துவமனை, தபால் நிலையம் விளையாட்டு மைதானங்கள் என அனைத்து உட்கட்டமைப்பு வாய்ப்புக்களுடன் கூடிய இந்த வெருகல் பிரதேசத்தைத்தான் இந்த இரண்டு திணைக்களங்களும் அபகரித்து வைத்திருக்கின்றனர் - என்றும் அவர் சாடினார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானிலை...

பலமடைவதும் இதுவே முதல் முறை. இதனால் நாடு முழுவதும் மிகக் கனமழையைப் பெறும் வாய்ப்புள்ளது. இந்தக் காற்றுச் சுழற்சியின் செல்வாக்கினுள் இலங்கை முழுவதும் உள்ளடங்கியுள்ளது.

ஒரு தாழ்வுநிலை / தாழமுக்கம் /காற்றழுத்த தாழ்வு நிலைஃ தாழ்வு மண்டலம்/ ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம்/ புயல்/ சூறாவளி/ சுப்பர் சூறாவளி எந்த திசை நோக்கி நகர்கிறதோ அந்தப் பகுதியே அதன் காற்றுக் குவிப்பு மையமும் மழை வலயமும் ஆகும். அந்த வகையில் இந்த தாழமுக்கம் நகரும் போது இந்த காற்றுக் குவிப்பு மற்றும் மழை வலயத்தினுள் தென் மாகாணம், ஊவா மாகாணம், மிக முக்கியமாக கிழக்கு, வடக்கு மாகாணங்கள் அடங்குகின்றன.

இன்று புதன்கிழமை முதல் கிழக்கு, வடக்கு மாகாணங்களுக்கு கனமழை கிடைக்கத் தொடங்கும். நாளை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மிகக் கனமழையும், வேகமான காற்றும் வீசும். இந்த நிலைமை எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை வரை தொடரும்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை, மறுநாள் சனிக்கிழமை திரட்டிய மழைவீழ்ச்சியாக 350 மி.மீற்றருக்கு மேல் கிடைக்க வாய்ப்புள்ளது. ஏற்கனவே, கிழக்கு மாகாணத்தின் கணிசமான பகுதிகள் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. வரும் நாட்களில் கிடைக்கும் கனமழையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல இடங்களில் வெள்ள அனர்த்தத்தை ஏற்படுத்தும். எதிர்வரும் நாட்கள் வானிலை ரீதியாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மிக நெருக்கடியான நாட்களாகும்.

எனவே, பொதுமக்கள் இந்த நாட்களில் கவனமாக செயல்பட வேண்டும். பின்வரும் விடயங்களை கவனத்தில் கொண்டால் பாதிப்புகளை குறைக்க முடியும். அத்துடன், மாதிரிகளின் அடிப்படையிலேயே இந்த முன்னறிவிப்பு வழங்கப்படுகிறது. தீவிர வானிலை தொடர்பான இந்த முன்னறிவிப்புகளில் சில மாற்றங்கள் நிகழலாம் - என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## விடுதலை...

சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "இலங்கையில் உள்ள நான்கு இனத்தைச் சேர்ந்த பேராளிகளும் மாவீரர் ஆகியுள்ளனர். எமது போராட்டத்தின் நியாயத்தன்மையை உணர்ந்தே இறுதி யுத்தம் வரை உறுதியுடன் போராடியுள்ளனர். இந்த மாவீரர்களின் பெற்றோர்களும் கௌரவிக்கப்பட வேண்டியவர்களே. வருடாவருடம் இந்த விடயம் தொடர்பாக நான் வலியுறுத்தி வருகிறேன்.

குறிப்பாக 2022ஆம் ஆண்டு மாவீரர் நாளில் கனகபுரம் துயிலுமில்லத்தில் எழுத்துமூலமாக நான் விடுத்த வேண்டுகோள் புறந்தள்ளப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு மூன்று மாவீரர்களின் அன்னையான சிங்களப் பெண்மணி துயிலுமில்ல வாசலில் அவமானப்படுத்தப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டமை ஒரு மாவீரரின் தந்தை என்ற வகையில் தாங்கொணா துயரத்தை ஏற்படுத்தியது.

கடந்த ஆறு வருடங்களாக நான் விடுத்த அதே வேண்டுகோளை நேற்று (நேற்றுமுன்தினம்) கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதனிடம் அவரின் பணிமனையில் நினைவுபடுத்தினேன். இவர் 2022ஆம் ஆண்டு மாவீரர் நாள் காலப்பகுதியில் அடுத்த ஆண்டு கட்டாயம் இராமநாதபுரம் பகுதியை சேர்ந்த வீரவேங்கை ரமீஸின் பெற்றோர் கௌரவிக்கப்படுவார்கள் என உறுதிமொழி வழங்கியவர்.

தற்போது அவரின் பதில் எனக்கு ஆச்சரியமளித்தது. "புலம்பெயர் உறவுகள் சிங்கள - முஸ்லிம் மாவீரர்களின் பெற்றோரை கௌரவிப்பது குறித்து கடும் சினத்துடன் ஆட்சேபிக்கிறார்கள்", என்பதே இப்பதில். தவறான புரிதல் இது. மக்கள் பிரதிநிதி அதுவும் உள்ளூராட்சி சபையின் தவிசாளர் எமது மாவீரர்களின் பெற்றோரின் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டியவர் இப்படி பதில் சொல்வதை நீங்களும் ஏற்கமாட்டீர்கள் என்பதை நான் முழுமையாக நம்புகிறேன். மாவீரர் பெற்றோரை புறந்தள்ளுவதைத் தேசியத் தலைவரின் ஆன்மாவும் மன்னிக்காது.

எனவே, புலம்பெயர்ந்து வாழும் தாங்கள் அனைவரும் தேசியத் தலைவரின் தலைமையை ஏற்றுப் போராடிய சிங்கள - முஸ்லிம் - பறங்கி என மாவீரர்களின் பெற்றோர் புறந்தள்ளப்படுவது குறித்த ஆட்சேபனைகளையும் எதிர்காலத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற அறிவுரையையும் கரைச்சி பிரதேச சபைத் தலைவருக்கும் அவரை வழிநடத்தும் மாவட்ட தலைமைக்கும் உடனடியாக சாத்தியமான சகல வழிகளிலும் தெரிவியுங்கள். நன்றி மறந்த இனத்தவராக நாம் மாறக்கூடாது.

இன்னொரு விடயம் மாவீரர் நினைவேந்தல், மாவீரர் பெற்றோர் கௌரவிப்புகளை தமது அரசியல் எதிரிகளைச் சாடும் களங்களாக மாற்றவேண்டாமென தயவு செய்து சம்பந்தப்பட்டவர்களுக்கு சுட்டிக்காட்டுங்கள். இன உறவுகளை மேம்படுத்துவதில் ஆர்வமுள்ள ஒரு முஸ்லிம் குழுவினர் ஏதாவதொரு மாவீரர் துயிலுமில்லத்தில் ஒரு முஸ்லிம் மாவீரரின் பெற்றோரை கௌரவிக்க வேண்டும். இதற்கான முழுச் செலவையும் தாங்கள் பொறுப்பேற்கிறோம் என எனக்குத் தெரிந்த ஒரு தரப்பு மூலம் வேண்டுகோள் விடுத்தனர். இந்த வேண்டுகோள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைமைக்கு அதன் மத்திய குழு உறுப்பினர் மூலம் தெரியப்படுத்தியும் அந்தப் பேச்சைத் தொடர அவர்கள் விரும்பவில்லை என்பதைக் குறிப்பால் உணர்த்தினர்.

எனவே, தேசியத் தலைமையை நேசிக்கும் புலம்பெயர் நாடுகளில் உள்ள எமது உறவுகள், முன்னாள் போராளிகள் இந்த விடயத்தில் தங்களின் முடிவை உடனடியாகக் கிளிநொச்சிக்கும் காங்கிரஸ் பிரமுகர்களுக்கும் தெரிவிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றேன் - என்றும் கூறினார். (ஐ)

## கரணவாய்...

தப்பிச் சென்றனர். இதில், ராஜகுலேந்திரன் பிரிந்தன் (வயது 29) என்ற இளம் குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

இந்தக் கொலை தொடர்பில் விசாரணை நடத்திய காங்கேசன்துறை குற்றப் புலனாய்வு பிரிவு பொலிஸார் அம்பாறை - அக்கரைப்பற்றில் வைத்து சந்தேகநபர்களை நேற்றுமுன்தினம் கைது செய்தது. சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டபோது அவர்க ளிடமிருந்து 15 கிராம், 60 கிராம் ஐஸ் போதைப்பொரு ளும் கைப்பற்றப்பட்டது. அத்துடன், கொலைக்கு பயன் படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் நவீனரக மோட் டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டன.

மேலும், கைதான சந்தேகநபர்கள் நேற்றைய தினம் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு, நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி வரை அவர்களை பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க நீதிவான் அனுமதியளித்தார்.

## போதைப்பொருட்களுடன்...

போத்தலுக்குள் மறைத்து போதை மாத்திரைகளை கடத்தி வந்து யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்தவரை பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து மேலும், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேசமயம், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் மூளாய் - வேரம் பகுதியில் 2 கிராம் 100 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 24 வயது இளைஞர் கைது செய்யப்பட்டார். அவர் பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருட்களை விற்பனை செய்து வந்துள்ளார் என்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதேபோன்று, பொன்னாலை தெற்கு, சுழிபுரம் பகுதியில் வைத்து 2 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 24 வயதான இளம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

## வடக்கில்...

கூடுதல் அக்கறையுடன் செயல்பட வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநருக்கும் மாகாணத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் புத்திக சிறிவர்த்தனவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றபோதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், யாழ். மாவட்டத்தில் "வெளிப்படுத்தல் உறுதி" மூலமாகப் போலி ஆவணங்களைத் தயாரித்து, காணி மோசடிகள் இடம்பெறுவது அதிகரித்து வருகிறது. இதனைத் தடுப்பதற்குப் பொலிஸார் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடரவேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் சட்ட விரோத மணல் அகழ்வு கட்டுப்பாடின்றி இடம்பெற்று வருகின்றன. சில பகுதிகளுக்குப் பொலிஸாரால் கூடச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது -என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், அப்பகுதிகளில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்க விசேட அதிரடிப் படையினரின் உதவியைக் கோரியுள்ளதாகத் தெரிவித்தார். (ஐ)

## தமிழ் அரசின்...

திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த நிலையில் நீதிபதி விடுமுறையில் சென்றிருந்தமையால் வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வாழைச்சேனை...

கடந்த 22ஆம் திகதி தொல்பொருள் திணைக்களம் அமைத்த பெயர் பலகைகள் அகற்றப்பட்டன. பிரதேச சபையின் அனுமதி பெறப்படாது இவை அமைக்கப்பட்டன என்று கூறியே அவை அகற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில், பொலிஸாரால் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். இந்த நிலையில், வாழைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் சுதாகரன், பிரதி தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் இருவர் நேற்றைய தினம் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் சரணடைந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிவான் ஐவரையும் தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீர பிணையில் செல்ல அனுமதித்தார். அத்துடன், இந்த வழக்கு எதிர்வரும் டிசெம்பர் 15ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அனர்த்தத்தால்...

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் 29 குடும்பங்களைச் சேர்ந்த 98 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 4 குடும்பங்களை சேர்ந்த 21பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், 4 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் மின்னல் தாக்கம், வெள்ள அனர்த்தத்தால் 4 குடும்பங்களை சேர்ந்த 16 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் கடும் காற்றறால் 3 குடும்பங்களை சேர்ந்த 7 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், 2 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

வேலணை பிரதேச செயலர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேரும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், ஒரு வீடு முழுமையாக சேதமடைந்துள்ளது. காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு குடும்பங்களை சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## கல்வித்துறை...

பாராளுமன்றில் நேற்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், "கல்வி மறுசீரமைப்புக்கு இந்த ஆண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 4 கட்டங்களாக புதிய கல்வி மறுசீரமைப்பை அமுல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கல்வித்துறைக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் கேள்வியெழுப்பப்படுகிறது. 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கல்வித்துறைக்கு மாத்திரம் 70 ஆயிரத்து 400 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த காலங்களைக் காட்டிலும் பெருந்தொகையாகும். ஆட்சிக்கு வந்தவுடன் முதல் வருடத்திலேயே கல்விக்கு 6 சதவீதம் நிதி ஒதுக்குவதாக நாங்கள் எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை. இதேபோல் புதிய கல்வி மறுசீரமைப்புக்காக மாத்திரம் 300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

## சஜித்துக்கு...

பிடித்தவர்களும் தமிழ் மக்களிடத்தில் மன்னிப்புக் கோரவேண்டும் - இவ்வாறு இலங்கை தமிழ் அரசு கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் திருகோணமலைக்கு வந்த சிறீதரன் எம். பி, புத்தர் சிலை அமைக்கப்பட்டிருந்த இடத்துக்கும் வருகை தந்திருந்தார். இதன்போது, ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், தமிழ் மக்களுடைய நிலங்களை ஆக்கிரமிக்க சிங்கள பேரினவாத அரசு இலக்கு வைத்து இதனை செய்கிறது. மூன்று இனங்கள் கலந்து வாழும் திருகோணமலை மாவட் டத்தில் இனப் பிரச்னையை ஏற்படுத்தவே புத்தர் சிலை விவகாரம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழர்களை கலைக்க செய்கின்ற செயலாகவும் இது பார்க்கப்படுகிறது - என்றார். (ஐ)

## காதலனின்...

சேர்ந்த யுவதி ஒருவரும் காதலித்து வந்துள்ளனர். இருவருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்ட நிலையில் காதலி அண்மை நாட்களாக காதலனின் வீட்டில் தயங்கியிருந்துள்ளார்.

இந்த நிலையில், கடந்த 5ஆம் திகதி காதலனின் தாய் வைத்திருந்த தாலிக்கொடி உட்பட 8 பவுண் நகைகள் காணாமல் போயிருந்தன என்று கூறப்படுகிறது. இது, தொடர்பில் காதலனின் தாயார் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் காதலனின் வீட்டில் தங்கியிருந்த காதலியை நேற்றுமுன்தினம் இரவு கைது செய்தனர்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் தாலிக்கொடியை அவர், சாவகச்சேரியில் உள்ள தனியார் நிதி நிறுவனத்தில் அடைவு வைத்தார் என்றும் மீதி நகைகளை யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் விற்பனை செய்துள்ளார் என்றும் கூறியுள்ளார். அத்துடன், ரிக்ரொக் சமூக வலைத்தளத்தில் உள்ள நண்பர் ஒருவரின் உதவியுடன் இணைய முதலீட்டு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார் என்றும் இதுவரை 27 இலட்சம் ரூபாய் செலுத்தியுள்ளதாகவும் மேலதிக பணம் செலுத்துவதற்காக காதலன் வீட்டில் திருடினார் என்றும் அந்தப் பெண் வாக்குமூலம் அளித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தமிழரசுவின் அழைப்புக்கு முன்னணி விரைவில் பதில்!

## ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணி பேச்சில் பங்கேற்பதற்கு இணக்கம்

யாழ்ப்பாணம், நவ. 26

தமிழ் மக்கள் முகங்கொடுத்துவரும் பிரச்னைகள் தொடர்பில் ஆராய்வதற்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி விடுத்த சந்திப்பில் பங்கேற்பதற்குத் தாம் இணங்கியிருப்பதாக ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியும், அதற்குரிய பதிலை விரைவில் அனுப்பி வைக்கவிருப்பதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் தெரிவித்துள்ளன.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் முகங்கொடுத்துவரும் பொதுவான பிரச்னைகள் மற்றும் தீர்வுகள் குறித்துக் கலந்துரையாடும் நோக்கிலான சந்திப்பொன்றை நடாத்துவதற்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி நவம்பர் மாதம் 7 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் ஊடாக ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

அக்கடிதத்துக்குக் கடந்த 20 ஆம் திகதி பதில் அனுப்பிய ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் செயலாளர் இரட்ணலிங்கம், தமிழரசுக் கட்சியுடனான சந்திப்பில் பங்கேற்பதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும், டிசெம்பர் மாதம் 7 ஆம் அல்லது 14 ஆம் திகதி சந்திப்ப தற்குத் தாம் உடன்படுவதாகவும் தெரியப்படுத் தியிருந்தார்.

அதற்குப் பதிலளித்துள்ள தமிழரசுக்கட்சி எதிர்வரும் டிசம்பர் 7 ஆம் திகதி சந்திப்பை நடத்தமுடியும் என ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணிக்கு அறிவித்துள்ளது.

அதேவேளை, தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்துக் கலந்துரையாடப்படும் என தமிழரசுக் கட்சியின் அழைப்புக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்காத நிலையில், அக்கடிதத்துக்கு வெகுவிரைவில் உத்தியோகபூர்வமாகப் பதில் அனுப்பி வைக்கப்படும் எனத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது. (அ)

## இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 14 பில்லியன் டொலரை தாண்டியது

கொழும்பு, நவ. 26

இலங்கையின் ஏற்றுமதித் துறை 2025 ஜனவரி முதல் ஒக்ரோபர் மாதம் வரை 14,433.82 மில்லியன் அமெரிக்க டொலரை மொத்த வருமானமாக பதிவு செய்துள்ளது,

ஏற்றுமதி துறையில் ஆண்டின் முதல் 10 மாதங்களில் 14 பில்லியன் டொலர் வருமானத்தை தாண்டியது இதுவே முதல் தடவை என ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது. (அ)

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சந்தேகநபர் பிரித்தானியாவில் தஞ்சம் கோரினார்!

லண்டன், நவ. 26

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இலங்கையில் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்த ஒருவர் பிரித்தானியாவில் தஞ்சம் கோரியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது நாட்டுக்குத் திரும்பினால் தாமும் தமது குடும்பமும் பல்வேறு பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் எனத் தெரிவித்தே அவர் தஞ்சம் கோரியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, அவர் 2022 ஜனவரியில் இலங்கை அதிகாரிகளால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

எனினும், சில மாதங்களுக்குப் பின்னர் அவர், தமது மனைவியுடன் இலங்கையிலிருந்து பிரித்தானியாவுக்கு சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையிலேயே அவரும் அவரின் மனைவியும் பிரித்தானியாவில் அடைக்கலம் கோரியுள்ளனர்.

இதேவேளை, பிரித்தானியாவுக்கு சென்று இரண்டு வாரங்களுக்குப் பின்னர், அவரை சந்தேக நபராகக் கருதி இலங்கை அதிகாரிகள் பிடியாணை பிறப்பித்ததாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில், 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அவரது புகலிட கோரிக்கையை பிரித்தானியா நிராகரித்ததாகக் கூறப்படுகிறது.

அத்துடன், அந்த முடிவுக்கு எதிராக அவர் தாக்கல் செய்த மேன்முறையீடும் இந்த ஆண்டு மார்ச் மாதம் குடியேற்ற தீர்ப்பாய நீதிபதி ஒருவரால் நிராகரிக்கப்பட்டது.

## உயர்தர பரீட்சை வினாத்தாள் கசிவு: விசாரணை நடத்துமாறு கோரிக்கை

கொழும்பு, நவ. 26

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சில வினாத்தாள்கள் கசிந்துள்ளதா என்பதை உறுதி செய்ய விசாரணை நடத்தவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க நேற்று தெரிவித்துள்ளார்.

நுகேகொடையில் உள்ள தனியார் கல்வி நிலையமொன்றில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மாதிரி வினாத்தாளில் உள்ள 27 கேள்விகளும் உயர்தர பொருளாதார வினாத்தாளில் உள்ள 27 கேள்விகளும் ஒரே மாதிரியாக இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் தசநாயக்க பாராளுமன்றத்தில் கூறினார்.

இது குறித்து விசாரணை நடத்துமாறு பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் உள்ள மாணவர்கள் போல கிராமப் புறங்களிலுள்ள மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெற முடியாமைக்கு, இதுபோன்ற வினாத்தாள் கசிவே காரணம் என அவர் கூறினார். (அ)

## புதிதாக வரி செலுத்துவோர் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 26

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 2 இலட்சம் புதிய வரி செலுத்துவோர் பதிவு செய்யப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் 18,000 புதிய நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அந்த திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ருக்தேவி பெர்னாண்டோ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்த ஆண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு, கடந்த ஆண்டை விட 18 வீத அதிக வருமான இலக்கு வழங்கப்பட்டிருந்தது.

கடந்த வாரத்தில், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் வரலாற்றில் பெறப்பட்ட அதிகபட்ச வருமான இலக்கான 2 ட்ரில்லியன் ரூபாவைத் தாண்டி வருமானம் ஈட்ட முடிந்தது.

இந்த நேரத்தில், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 2,080 பில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளது- என்றார். (அ)

## வீதித் தகுதிச் சான்றிதழ் கட்டாயம்!

கொழும்பு, நவ. 26

அனைத்து பஸ்களும் அடுத்த ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் அடிப்படை வீதித் தகுதிச் சான்றிதழைப் பெறுவது கட்டாயமாக்கப்படும் எனப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அத்துடன் வீதித் தகுதிப் பரிசோதனை ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும், ஒவ்வொரு பேருந்தும் அதிகாரபூர்வ சான்றிதழைப் பெற வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார்.

மேலும் சான்றளிக்கப்பட்ட சோதனை மையங்களில் பேருந்துகளை பரிசோதிக்கவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். (அ)

## கொழும்புத் துறைமுக வளாகத்தில் புதைகுழி?

### உடனடி விசாரணைக்கு கோரிக்கை

கொழும்பு, நவ. 26

கொழும்பு துறைமுக வளாகத்தில் அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படும் பெரிய புதைகுழிகள் குறித்து உடனடி மற்றும் வெளிப்படையான விசாரணை நடத்த வேண்டும் என்று மக்கள் போராட்ட முன்னணி கோரியுள்ளது.

துறைமுகப் பகுதியில் எலும்புக்கூடு எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டதாக அறிக்கைகள் வெளியாகியதைத் தொடர்ந்து, அந்த அமைப்பினரின் பிரதிநிதிகள் உத்தியோகபூர்வ தகவல்களைப் பெற நீதி அமைச்சுக்கு சென்றனர்.

தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினர் மற்றும் சட்டத்தரணி நுவன் போபகே, இந்தக் கண்டுபிடிப்புகள் இலங்கையின் நீண்டகால காணாமல் போனோர் பிரச்னை மற்றும் அரச வன்முறைகளின் கருமை நிறைந்த வரலாற்றை மீண்டும் நினைவூட்டுவதாக கூறினார்.

1971,198889 கிளர்ச்சிக் காலங்களில் ஆயிரக்கணக்கானோர் பலவந்தமாக காணாமல் போனதாகவும், வடக்கு மாகாணத்தில் மட்டும் 12,000 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு துறைமுகத்தில் கண்டெடுக்கப்பட்ட எலும்புகளின் அடையாளம், அவர்கள் எந்த சூழ்நிலையில் உயிரிழந்தனர், பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார் உள்ளிட்ட கேள்விகளுக்குப் பதில் தேவைப்படுவதாக மக்கள் போராட்ட முன்னணி தெரிவித்துள்ளது.

இந்த எச்சங்கள் கடந்த காலத்தில் காணாமல் போன ஜே.வி.பி. உறுப்பினர்களுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்ற சந்தேகமும் எழுப்பப்பட்டுள்ளது. (அ)

## சிகிச்சைக்கு சென்ற யுவதி பாலியல் துஷ்பிரயோகம்!

### வைத்தியர் ஒருவர் கைது

கொழும்பு, நவ. 26

கஹதுடுவ பிரதேசத்தில் சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலைக்கு சென்ற யுவதி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் வைத்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கஹதுடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

26 வயதுடைய யுவதியே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார்.கைது செய்யப்பட்டவர் 40 வயதுடைய வைத்தியர் ஆவார்.

குறித்த யுவதி சிகிச்சைப் பெறுவதற்காக நவம்பர் 12 ஆம் திகதி கஹதுடுவ பிரதேசத்தில் உள்ள வைத்தியசாலை ஒன்றுக்கு சென்றுள்ளார். இதன்போது 19 ஆம் திகதி சிகிச்சைக்காக மீண்டும் வைத்தியசாலைக்கு வருமாறு குறித்த யுவதிக்கு சந்தேக நபரான வைத்தியர் கூறியுள்ளார்.

இதனால் குறித்த யுவதி 19 ஆம் திகதி சிகிச்சைக்காக மீண்டும் வைத்தியசாலைக்கு சென்றபோது சந்தேக நபரான வைத்தியரால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளார்.

பின்னர் குறித்த யுவதி இது தொடர்பில் கஹதுடுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

## இத்தாலியில் வசிக்கும் இலங்கையருக்கு சாரதி அனுமதி பத்திரம் வழங்க அனுமதி

கொழும்பு, நவ. 26

இத்தாலியில் வசிக்கும் இலங்கையர்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்க வழங்கும் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று முன்தினம் திங்கட்கிழமை சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் அமைச்சரவை இந்த தீர்மானத்தை எட்டியுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிவு தற்போது இத்தாலிக்கான இலங்கைத் தூதருக்கு அறிவிக்கப்படும். அதனைத் தொடர்ந்து, இத்தாலியில் சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்குப் பொறுப்பான நிறுவனங்களுடன் புரிந்தணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த இரண்டு மாதங்களுக்குள் இந்த செயல்முறையை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தாலியில் வசிக்கும் இலங்கையர்களின் கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் விதமாக அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டதாக அமைச்சர் மேலும் கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.11.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org